| | | |
|---|---|---|
| **O.S No.** | : | 121/2018 |
| **DATE** | : | **22.08.2025** |
| **NAME** | : | **சந்திரசேகர் (எ) சந்துரு** |
| **Father's Name/ Husband's Name** | : | **ராஜாராம்** |

**பி.வா. சா.1 குறுக்கு விசாரணை**

1. நான் தற்போது விஷ்ணு காஞ்சி காவல் நிலையத்திற்கு எதிரில் உள்ள ஆனந்தன் தெருவில் குடியிருந்து வருகிறேன். திரு.ராஜாராம் எனது தந்தை இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 143/2017 என்ற வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். தாவா சொத்து விச்சந்தாங்கல் கிராமத்தில் சர்வே எண் 90/2 தாவா சொத்து அமைந்துள்ளது. அதன் மொத்த விஸ்தீரனம் 17 செண்ட். அந்த சொத்து வாதியின் சுவாதினத்தில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண் 90/2ல் எனது உரிமையை காட்டுவதற்கு இவ்வழக்கில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை மற்ற வழக்குகள் அசல் வழக்கு எண் 143/2017, 145/2017ல் தாக்கல் செய்திருந்தேன். மேற்படி வழக்குகள் எனது தந்தை தாக்கல் செய்தது, அதன் விவரங்கள் எனக்கு தெரியாது. எனது தகப்பனாருக்கும் எனக்கும் தற்போது சரியான உறவு முறை இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**கற்றிந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

(S/d.Fanny Rajan)
Principal District Munsif,
Kancheepuram.